முருகப்பெருமான் துணை

**மகான் குலசேகர ஆழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.08.2022, செவ்வாய்கிழமை

1. ஓங்கார ஞான சூட்சுமமே
ஓங்கார ஞான சொரூபமே
ஓங்கார குடில்படைத்து அருளும்
ஓங்கார ஞானியே அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது யாளி திங்கள்
வரங்களென முன்னான்கீர் திகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 14 நாள், 30.08.2022 செவ்வாய்கிழமை)
வல்லமைபட அருளாசி தன்னை
3. தன்னையே குலசேகர ஆழ்வாரும்
தரணியே நலம்பெற உரைப்பேன்
அண்ணலாக அரங்கன் தரும்
அருளுபதேசமே உலகை காக்கும்
4. காக்கும் சக்தி தந்து கலியில்
கந்தவேலனே அரங்கமகானுள்
ஆக்கம் தந்து அருளிவர
அன்பர்கள் பிரணவக்குடில் நாடி
5. நாடியே அரங்கமகான் தரும்
ஞான உபதேசம் ஏற்று
தேடியே பிறவழி வகை அலையா
தொண்டாற்றி அரங்கன் நிழலில்
6. நிழலில் ஞானவாழ்வை தொடர
நிழலில் தருமம் தனை தொடர
நிழலில் சன்மார்க்கம் ஏற்றிட
நிலைத்தன்மை எனும் ஆற்றல் பலம்
7. பலமாக உலகோர் அடைந்து
பழுதின்றி ஞானவானாகச் சிறந்து
வலம் வருவர் கடைத்தேற்றமதை
வையகத்தில் அடைந்த மக்களாய்
8. மக்களின் மனித சக்தியை
மரணம் வெல்லும் மகா சக்தியாக
ஊக்கம்பட மாற்றம் அவதாரம்
உலகினில் அவதாரமாக அரங்க ஞானி
9. ஞானியரும் எடுத்து செயல்பட
ஞாலமதில் அரங்கன் தொடர்பு
இனிமைபட கொண்டு வருபவர்க்கு
இம்மையில் சர்வ வல்லமையாக

10. ஆகவே மரணமில்லாப் பெருவாழ்வும்
அவரவர் வாழுகின்ற காலமே
மகான்களின் ஆசியும் ஸ்பரிசமும்
மண்ணுலகை காக்கும் சக்தியும் கூடி

11. கூடியே ஞானசித்தர் காலமதை
குறையிலா படைத்து இனிதே
நாடெங்கிலும் ஞான ஆட்சியாம்
ஞானிகள் ஆட்சியை தந்திடுவர்
அருளாசி முற்றே

–சுபம்–